FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 IPC)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORMS

C 8304/17 06/IX (2006)TVL

1. District: Thiruvallur PS: VMDC, Year: 2006 FIR No: Date: 05.06.2006
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதல் தகவல் எண் நாள்

2. (i) Act: The Prevention of Sections: Sec 7
(ii) Act: Corruption Act 1988 as Sections:
(iii) Act: (amended by the Prevention of Sections:
(iv) Other Acts & Sections: Corruption (Amendment) Act 2018

3. (a) Occurrence of Offence Day: Date from: 04.06.2006 Date to: 04.06.2006
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period: Time from: 12.30hrs Time to: 23.00hrs
நேர அலகு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS: Date: 04.06.2006 Time: 23.30hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference: Entry No(s): 04.06.2006 Time: 23.30hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.06.2006 நேரம் 14.00hrs

4. Type of Information: Written/ Oral / Electronic form:
தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக / Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 2 Km North.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number: (b) Address: Joint-1 Sub Registry.
முறைக் காவல் எண் முகவரி Thiruvallur District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: — District: —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காவல் நிலைய பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: D. Satyanarayanan (b) Father's/ Husband's Name: —
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth: — (d) Nationality: (e) Passport No.:
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue: Place of Issue:
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation: Zonal Deputy Tahsildar. (g) Address: Zonal Deputy Tahsildar, Thiruvallur Tk office, Thiruvallur (PO), 31C (PO), 9.2.07, Thiruvallur district.
தொழில்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Enclosed Separately.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NIL —.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

புலனாய்வு அனுப்பப்படுவது:- அன்று 05.06.2026 அன்று
பகல் 14.00 மணிக்கு S. மாலா காவல் ஆய்வாளர் அவர்கள்
நிலைய அதிகாரி, திரு. R. மைக்கேல், தலைமை
காவலர் கண்காணிப்பாளர், மா.த.க. பிரிவு, திருநெல்வேலி அவர்கள் வழங்கிய
உத்தரவின் பேரில் திரு. A. சக்தியானந்தம், முதல் நிலை
வட்டாட்சியர், திருநெல்வேலி நகரம் அவர்கள் முன்னிலையில்
மேலே குறிப்பிட்டுள்ள அதிகாரி (மாதிரி), திருநெல்வேலி அவர்கள்
வழங்கிய புலனாய்வு முறி மூலம் பதிவு செய்த விபரம் பின்வருமாறு.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

5-6-2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

05/06/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.06.2026 at 17.30hrs.

Name: பெயர் S. Mala
Rank: நிலை Inspector of police
Vadakku, Tvl.

காலம் 7-ல் கண்டவாறு குற்றம் சாட்டபட்டவர்களின் விவரம்:-

A1	திரு.R.ஸ்ரீதர், வயது-47, த/பெ. இராமன், உதவியாளர் (பொறுப்பு) சார்பதிவாளர், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம்.
A2	திரு.அருள், வ/42, த/பெ. அருணாச்சலம், திருவள்ளுவர் தெரு, திருமழிசை, பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.
A3	திரு.பாலசுப்பிரமணியன், வ/55, த/பெ.ராஜா, எண்.11, கிருஷ்ண நகர், 3வது தெரு, திரு.வி.க நகர், சென்னை-82,
A4	திரு.செல்வகுமார், வ/54, த/பெ.பிச்சைமுத்து, எண்.10, ஸ்ரீநகர், முதல் குறுக்கு தெரு, காக்களூர் கிராமம், திருவள்ளூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.
A5	திருமதி.காஞ்சனா, வ/53, க/பெ. மனோகரன் எண்.22, நார்தவாடா கிராமம், திருவலாங்காடு போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.
A6	திரு.பிரவேஷ்குமார், வ/25, த/பெ.ஏழுமலை, எண்.11/6, போரக்ஸ் சாலை, ஏழு கிணறு, சென்னை-79.
A7	திரு.மனோகரன், த/பெ.நடராஜன், நார்தவாடா கிராமம், திருவலாங்காடு போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.
A8	திரு.கார்த்திக், வ/42, த/பெ. அரிதாஸ், எண்.15, திரு.வி.க, தெரு, ஜே.என்,ரோடு, திருவள்ளூர்,

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

அனுப்புநர் திரு.D.சத்தியநாராயணன், மண்டல துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர் / மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர் பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர். நாள்:- 04.06.2026. அய்யா, பொருள்:- திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், திருவள்ளூர் - 04.06.2026-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான நடவடிக்கை எடுக்கக்கோரி - கடிதம் - அளித்தல் சம்மந்தமாக. பார்வை:- திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறைகள், நாள்- 04.06.2026, திருவள்ளூர் மாவட்டம், 1 எண் இணை சார்பதிவாளர், திருவள்ளூர் அலுவகத்தில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலம் 1 எண் இணை சார்பதிவாளர் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அவர்களுக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், கூட்டு தணிக்கை மேற்கொள்வதற்காக அவர்களுடைய ந.க.எண்.320/2025/L1. நாள்.04.06.2026 கடித்தத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் நக.எண்.13187/2026/அ3, நாள்.04.06.2026-ன்படி கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக திரு.D.சத்தியநாராயணன், மண்டல துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில், இன்று 04.06.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.ஜெயக்குமார், காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மாலை சுமார் 15.30 மணி சுமார் 23.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் கூட்டுச்சோதனையின்போது அலுவலகத்தில் உள்ளே இருந்த பொதுமக்களான திரு.அருள், வ/42, த/பெ. அருணாச்சலம், திருவள்ளுவர் தெரு, திருமழிசை, பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் அவர்களிடமிருந்து பணம் ரூ.1,14,500/-மும், திரு.பாலசுப்பிரமணியன், வ/55, த/பெ.ராஜா, எண்.11, கிருஷ்ண நகர், 3வது தெரு, திரு.வி.க நகர், சென்னை-82 என்பவரிடமிருந்து பணம் ரூ.7,400/-மும், திரு.செல்வகுமார், வ/54, த/பெ.பிச்சைமுத்து, எண்.10, ஸ்ரீநகர், முதல் குறுக்கு தெரு, காக்களூர் கிராமம், திருவள்ளூர்

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடம் பணம் ரூ.22,800/-மும், திருமதி.காஞ்சனா, வ/53, க/பெ. மனோகரன், எண்.22, நார்தவாடா கிராமம், திருவலாங்காடு போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடமும், திரு.பிரவேஷ்குமார், வ/25, த/பெ.ஏழுமலை, எண்.11/6, போரக்ஸ் சாலை, ஏழு கிணறு, சென்னை-79 என்பவரிடம் ரூ.16,000/-மும், திரு.மனோகரன், த/பெ.நடராஜன், நார்தவாடா கிராமம், திருவலாங்காடு போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடம் பணம் ரூ.12,700/-மும், திரு.கார்த்திக், வ/42, த/பெ. அரிதாஸ், எண்.15, திரு.வி.க, தெரு, ஜே.என்,ரோடு, திருவள்ளூர் என்பவரிடம் ரூ.7,400/- ஆக மொத்தம் பணம் **ரூ.1,89,800/-** சோதனையின்போது மேற்படி நபர்கள் வைத்திருந்த பணத்திற்கு உரிய விளக்கம் கூறாததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், பணம் கைப்பற்றப்பட்ட நபர்களை விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்தும், அவர்களிடமிருந்து அவர்கள் தரப்பு விளக்கங்களை அவர்கள் கைப்பட எழுதி கொடுத்த கடிதங்கள் மற்றும் அலுவலகத்தின் வருகைப்பதிவேட்டின் நகல், கையிருப்புப்பதிவேட்டின் நகல் மற்றும் 04.06.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரப்பதிவுகளின் விவரங்கள் அடங்கியதன் "A" account-ன் நகல்களில் சார்பதிவாளரின் சான்றொப்பம் மற்றும் என்னுடைய கையொப்பம் அடங்கியவற்றையும், மேலும் சோதனையின்போது உரிய விளக்கம் கூறாததால் சார்பதிவாளர் அலுவலக அதிகாரிகளுக்கு வைத்திருந்த பணம் என கருதி சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே இருந்த பொதுமக்களிடமிருந்த கைப்பற்றப்பட்ட பணம் **ரூ.1,89,800/-** (500X142, 200X579, 100X30)-ஐ நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். திரு.D.சத்தியநாராயணன், மண்டல துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர். இணைப்பு - 1.திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண.13187/2026/அ3, நாள்.04.06.2026. நகல், 2,சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் **ரூ.1,89,800/-** (ஒரு லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து எட்டு நூறு ரூபாய்), 3,செயல்முறை ஆணை அசல். 4.அட்டைவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் கைப்பட எழுதிக்கொடுத்த விளக்கக்கடிதங்கள் (15), 5.மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் (7) மற்றும் 6.அலுவலகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள். அதில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.ஜெயக்குமார் அவர்களால் எனக்கு வழக்குப்பதிவு செய்ய உத்திரவிடப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. மேலும்

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

திருவள்ளூர் மாவட்டம், 1 எண் இணை சார்பதிவாளர், திருவள்ளூர் அலுவகத்தில் திடீர் கூட்டுத்தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறையின் விவரம் வருமாறு:- இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள். முன்னிலை:-திரு.D.சத்தியநாராயணன், நாள்:- 04.06.2026. பொருள்:- திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், திருவள்ளூர் - 04.06.2026-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான-செயல்முறைகள். ஆணை:- திருவள்ளூர் மாவட்டம், 1 எண் இணை சார்பதிவாளர், திருவள்ளூர் அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலம் 1 எண் இணை சார்பதிவாளர் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அவர்களுக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், கூட்டு தணிக்கை மேற்கொள்வதற்காக அவர்களுடைய ந.க.எண்.320/2025/L1. நாள்.04.06.2026 கடித்தத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.04.06.2026-ன்படி கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக திரு.D.த்தியநாராயணன், மண்டல துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில், இன்று 04.06.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.ஜெயக்குமார், காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று 04.06.2026-ந்தேதி மாலை சுமார் 15.00 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு மாலை சுமார் 15.15 மணிக்கு திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகம் பின்புறம் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் வந்து வாகனங்கத்தை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து சென்று, ஆங்காங்கே குழுவினருடன் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்துக்கொண்டிருந்தபோது, மேற்படி 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் உள்ளே சென்று பத்திரப்பதிவு செய்வதும், ஆவணப்பதிவாளர்கள் அலுவலகத்திற்கு

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

உள்ளே சென்று வருவதுமாக பத்திரப்பதிவு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது மாலை சுமார் 15.30 மணியளவில் திருவள்ளூர் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்குள்ளே குழுவினருடன் சென்றபோது, அலுவலகத்தின் வெளியே வாராண்டாவில் நின்றுக்கொண்டிருந்த பொதுமக்களையும், சிலர் விஜிலென்ஸ் போலீஸார் என அடையாளம் தெரிந்து வெளியே ஓட முயற்சி செய்தவர்களையும் உள்ளே அழைத்துவந்து, சார்பதிவாளர் அறையில் இருந்த நாற்காலிகளில் அமரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் அனைவரையும் குழுவினர் உதவியுடன் இருக்கையில் அமரசெய்தோம். பின்னர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் சார்பதிவாளர் மற்றும் அனைவரிடமும் என்னை அறிமுகம் செய்துக்கொண்டும். காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் திருவள்ளூர் விஜிலென்ஸ் பார்ட்டிகளையும் அறிமுகம் செய்து வைத்து, திடீர் கூட்டுத்தணிக்கை செய்ய வந்துள்ளதாக கூறி அனைவரையும் சோதனை செய்ய ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டோம். திருவள்ளூர் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரைப்பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் R.ஸ்ரீதர், வயது-47, த/பெ. இராமன் என்றும் அவர் திருவள்ளூர் பொறுப்பு சார்பதிவாளராக 19.01.2026 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தான் எண்.29, மகாத்மா காந்தி நகர். வெண்மணம்புதூர், கடம்பத்தூர், திருவள்ளூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்துவருவதாக தெரிவித்தார். அவரிடம் என்னை அறிமுகம் செய்துக்கொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரை அறிமுகம் செய்து வைத்து அவர்களுடைய அடையாள அட்டையை காட்டியும், சுய பரிசோதனை செய்து காட்டியும். மேற்படி அலுவலகத்தை கூட்டுத் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தெரிவித்து ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. சார்பதிவாளர் அவர்களிடம் அலுவலக பணியாளர்கள் குறித்து விசாரணை செய்ய, அலுவலகத்தில் தன்னுடன் இரண்டு இளநிலை உதவியாளர்கள் 1) திரு.லோகேஷ் மற்றும் 2) திரு.ராஜலக்ஷ்மி ஆகியோர் பணிபுரிவதாகவும், ஒப்பந்த பணியாளர்களாக சிக்மா என்ற தனியார் நிறுவனம் மூலம் 1) திரு.செங்கல்வராயன், Data Entry Operator ஆகவும் மற்றும் 2) திரு.அருண்கண்ணன் என்பவர் IP Camera Operator ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்து, அலுவலகத்தை சோதனை செய்ய ஆட்சேபனை ஏதுமில்லை என தெரிவித்தார். பின்னர் அலுவலகத்தில் வாராண்டாவில் நின்று கொண்டிருந்தவர்கள் மற்றும் அமரவைக்கப்பட்டிருந்த பொதுமக்களை விசாரணை செய்தவிவரம் கீழ்க்கண்டவாறு:-

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.S.B.விக்னேஷ், வ/25, எண்.10/11, கிருஷ்ண நகர், 3வது தெரு, திரு.வி.க.நகர், சென்னை-82	ரூ.2,700/-	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்தாகவும், தன்னுடைய சொந்த செலவிற்காக பணத்தை வைத்திருந்ததாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.H.காந்தி, வ/47, க/பெ, உரிபாபு, எண்.8, பாவேந்தர் தெரு, இராஜாஜிபுரம், திருவள்ளூர்	ரூ.2,650/-	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு MDO பத்திரம் செய்ய வந்தாகவும், தன்னுடைய சொந்த செலவிற்காக பணத்தை வைத்திருந்ததாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.D.குமரேசன், வ/44, த/பெ. தாமோதரன், எண்.14, கிருஷ்ணாபுரம் கிராமம், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.8,000/-	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு Guidline Value தெரிவிக்கொள்வதற்காக வந்தாகவும், தனக்கு watch வாங்குவதற்காக பணத்தை வைத்திருந்ததாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு.S.சரவணன், த/பெ.சீனிவாசன், எண்.110, பெரியார் தெரு, புன்னப்பாக்கம், திருவள்ளூர்.	ரூ.2,500/-	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்தாகவும், தன்னுடைய சொந்த செலவிற்காக பணத்தை வைத்திருந்ததாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
5.	திருமதி.V.சுகுணா, வ/35 எண்.43, பம்பு அவுஸ் தெரு, பெரியகுப்பம், திருவள்ளூர்.	ரூ.1,700/-	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்தாகவும், தன்னுடைய குழந்தைகளுக்கு புத்தகம் வாங்குதற்காக வைத்திருந்ததாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
6.	திரு.R.அரிவேந்தன், வ/43, த/பெ,ராஜி, எண்.1/121, டாக்டர் எம்.ஜி.ஆர் சாலை, மயலயம்பாக்கம், சென்னை,123,	ரூ.1,100/-	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்தாகவும், தன்னுடைய சொந்த செலவிற்காக பணத்தை வைத்திருந்ததாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
7.	திரு.சுப்பிரமணி, வ/51, த/பெ,ராஜாமணி, எண்.19/36, மேட்டுகுளம் தெரு, பாடி, சென்னை-50.	ரூ.15,000/-	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்தாகவும், தன்னுடைய பத்திர தயார் செய்த ஆவண எழுத்தருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

8.	திரு.சுரேஷ்பாபு, பெ.ராஜராம், எண்.6/16, நேதாஜி தெரு, எருக்கன்சேரி, சென்னை-118	ரூ.5,700/-	சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வந்தாகவும், தன்னுடைய அம்மாவின் மருத்துவ செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
9.	திரு.அருள், வ/42, த/பெ. அருணாச்சலம், திருவள்ளுவர் தெரு, திருமழிசை, பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ,1,14,500/-	தான் தன்னுடைய உறவினர் ஆவண பதிவு செய்ததால் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும், தன்னுடைய கம்பெனிகளுக்கு தேவையான ஆர்டர் செய்யப்பட்ட பொருட்களை வாங்குவதற்காக பணம் வைத்துள்ளதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததால், வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
10.	திரு.பாலசுப்பிரமணியன், வ/55, த/பெ.ராஜா, எண்.11, கிருஷ்ண நகர், 3வது தெரு, திரு.வி.க நகர், சென்னை-82,	ரூ.7,400/-	தான் மகன் பெயரில் நிலம் வாங்கி ஆவண பதிவு செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகம் வந்திருந்ததாகவும், பத்திரப்பதிவு செலவிற்காக பணம் கொண்டு வந்ததாக தெரிவித்ததால், மேற்படி பணம் சார்பதிவாளர் அலுவலர் அதிகாரிகளுக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கலாம் என்று கருதி வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
11.	திரு.செல்வகுமார், வ/54, த/பெ.பிச்சைமுத்து, எண்.10, ஸ்ரீநகர், முதல் குறுக்கு தெரு, காக்களூர் கிராமம், திருவள்ளூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.22,800/-	தனக்கு சொந்தமான நிலத்தினை திருமதி.காஞ்சனா என்பவருக்கு விற்பனை செய்ததாகவும், அந்த பத்திர பதிவிற்காக சார்பதிவாளர் அலுவலகம் வந்திருந்ததாகவும், பத்திரப்பதிவு செலவிற்காக பணம் கொண்டு வந்ததாக தெரிவித்ததால், மேற்படி பணம் சார்பதிவாளர் அலுவலர் அதிகாரிகளுக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கலாம் என்று கருதி வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
12.	திருமதி.காஞ்சனா, வ/53, க/பெ. மனோகரன் எண்.22, நார்தவாடா கிராமம், திருவலாங்காடு போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.9,000/-	தான் செல்வகுமார் என்பவரிடமிருந்து நிலம் வாங்கி அதற்கான பத்திரபதிவு செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், தன்னிடம் இருந்த பணம் தன்னுடைய மகனுக்கு பள்ளி பேக் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததால். அப்பணத்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

13.	திரு.பிரவேஷ்குமார், வ/25 த/பெ.ஏழுமலை, எண்.11/6, போரக்ஸ் சாலை, ஏழு கிணறு, சென்னை-79.	ரூ.16,000/-	தான் சென்னை கொளத்தூரில் உள்ள குகன் பில்டர்ஸ் & புரோமோட்டார்ஸ் நிறுவனத்தில் Leagal Advisor ஆக பணிபுரிவதாகவும், தங்களது அலுவலக கிளைண்ட் பத்திரபதிவு நடைபெறுவதால் சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், தன்னிடம் இருந்த பணம், தன்னுடைய ஒரு வாரத்திற்கான சம்பள பணம் என தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததால், அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
14.	திரு.மனோகரன், த/பெ.நடராஜன், நார்தவாடா கிராமம், திருவலாங்காடு போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.12,700/-	தனது மனைவி காஞ்சனா பெயரில் பத்திர பதிவு செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், தன்னிடம் இருந்த பணம், தன்னுடன் வந்த உறவினர்களுக்கு, உணவு வாங்கி கொடுப்பதற்காகவும், வாகனத்திற்கு டீசல் போடுவதற்காகவும் வைத்திருந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததால், அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
15.	திரு.கார்த்திக், வ/42, த/பெ. அரிதாஸ், எண்.15, திரு.வி.க, தெரு, ஜே.என்,ரோடு, திருவள்ளூர்	ரூ.7,400/-	தனது நிலத்தை தன் அண்ணன் சுப்பிரமணி என்பவருக்கு விற்பனை செய்ததாகவும், அதற்கான ஆவண பதிவிற்காக சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், தன்னிடம் இருந்த பணம் அவசர தேவைக்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததால், அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி 1 முதல் 8 வரை பொதுமக்கள் அனைவரையும் தனிதனியாக நான் விசாரணை செய்தபோது, அவர்களுடைய விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார்கள், அதில் நான் கையொப்பம் செய்தேன். வரிசை எண்.1 முதல் 8 வரையானவர்கள் அட்டவணையில் குறிப்பிட்டப்படி வைத்திருந்த பணம் விசாரணைக்கு பின்னர் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 9 முதல் 15 வரை உள்ளவர்கள் அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தெரிவித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், மேற்படி நபர்கள் வைத்திருந்த பணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

அதன்பின்னர் குழுவினருடன் சார்பதிவாளர் இருக்கையை சோதனை செய்ய கணினி பொறுத்தப்பட்டிருந்தது. மேஜையின் மீது பத்திரப்பதிவுக்காக தாக்கல் செய்யப்பட்ட சில ஆவணங்கள் இருந்தன. மேற்படி ஆவணங்களை பதிவு செய்துக்கொண்டிருப்பதாக சார்பதிவாளர் திரு.ஸ்ரீதர் அவர்கள் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்தபோது, அவருடைய பர்ஸில் ரூ.410/- பணம் இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, காலை அலுவலகத்திற்கு வந்தபோது செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். மேலும், அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பதிவேட்டில் பார்வையிட்டபோது, அதில் ரூ.410/- குறிக்கப்பட்டிருந்தது. எனவே, அந்த பணம் மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அவருடைய இடதுப்புறம் அமர்ந்திருந்த நபரைப்பற்றி விசாரிக்க திரு.அருண்கண்ணன் என்றும், தான் எண்.3, பிள்ளையார் கோவில் தெரு, ஒண்டிகுப்பம் கிராமம், திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் சிக்மா தனியார் நிறுவனம் மூலம் IP Camera Operator திருவள்ளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த இரண்டு வருடமாக பணிபுரிவதாக. சார்பதிவாளருக்கு உதவியாக வேலை செய்துக்கொண்டிருந்ததாகவும் தெரிவித்தர். அவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ஏதுமில்லை. தனிநபர் பதிவேட்டில் பார்வையிட்டபோது, அதில் ரூ.400/- குறிக்கப்பட்டிருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது, மதிய உணவிற்கு செலவு செய்துவிட்டதாக தெரிவித்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு வலதுபுறம் அமர்ந்திருந்தவரை பற்றி விசாரித்தபோது, தனது பெயர் திருமதி.C.ராஜலஷ்மி, வயது-59, க/பெ.சந்திரன் என்றும், தான் எண்.E201 காசகிராண்ட் கேஸ்டல், தர்மராஜபுரம், மணப்பாக்கம், சென்னை-125 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும். தான் இளநிலை உதவியாளராக கடந்த இரண்டு வருடமாக பணிபுரிந்து வருவதாகவும், இங்கு திருமண பதிவு, ழிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் பணி, வில்லங்க சான்று வழங்குதல் போன்ற பணிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை பெண் காவலர் மூலம் சோதனை செய்யப்பட்டது. அவருடைய கைப்பையை சோதனை செய்தபோது, அவருடைய கைப்பையில் ரூ.420/- இருந்தது. தனிநபர் பதிவேட்டில் பார்வையிட்டபோது, அதில் ரூ.420/- குறிக்கப்பட்டிருந்தது. எனவே, அந்த பணம் மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கணினி அறையில் சோதனை செய்தபோது, அங்கு கணினியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த நபரை விசாரித்தபோது, அவர் பெயர் திரு.செங்கல்வராயன் என்றும், தான் எண்.171/2, பிள்ளையார் கோவில் தெரு, அனாகபுத்தூர், சென்னை-70 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும். தான்

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

Data Entry Operator ஆக மூன்று ஆண்டுகளாக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.400/- பணம் இருந்தது. தனிநபர் பதிவேட்டில் பார்வையிட்டபோது, அதில் ரூ.570/- குறிக்கப்பட்டிருந்தது. மீதி ரூ.170 குறித்து கேட்டபோது மதியம் உணவுக்கு செலவு செய்து விட்டதாக தெரிவித்தார். எனவே, அந்த பணம் மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருக்கு அடுத்து இருக்கையில் இருந்த நபரை விசாரிக்க, தனது பெயர் திரு.லோகேஷ் என்றும், தான் எண்.86, பிள்ளையார் கோவில் தெரு, இராமனுஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்பந்தூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த இரண்டு வருடமாக இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதுமில்லை. தனிநபர் பதிவேட்டில் பார்வையிட்டபோது, அதில் ரூ.100/- குறிக்கப்பட்டிருந்தது. பணம் ரூ.100 குறித்து கேட்டபோது மதிய உணவிற்காக செலவு செய்து விட்டதாக தெரிவித்தார். அடுத்த இருக்கையில் கணினியில் வேலைப்பார்துக்கொண்டிருந்த நபரை விசாரிக்க, அவரது பெயர் திருமதி.அனிதா, வயது-42, க/பெ.கமல்தாஸ், எண்.46, பாரதி நகர், கேசவநல்லாத்தூர் கிராமம், கடம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம் என்றும், தான் ஆவண எழுத்தர் திரு.சுகுமார், திருவள்ளூர் என்பவரிடம் வேலை பார்ப்பதாகவும், இன்று தங்கள் அலுவலகம் மூலம் 3 ஆவணங்கள் பத்திர பதிவு தாக்கல் செய்யததாகவும், சார்பதிவாளர் அலுவலகத்தில் வேலை அதிகமாக உள்ள நாட்களில் சார்பதிவாளர் உத்தரவின்படி பதிவு செய்யப்படும் ஆவணங்களை ஸ்கேன் செய்யும் வேலைகளை செய்து கொடுப்பதாகவும் தெரிவித்தார். அவரை பெண் காவலர் மூலம் சோதனை செய்தபோது, அவரது பர்ஸில் ரூ.100/- இருந்தது, அப்பணத்தை பற்றி விசாரிக்க அவர் சொந்த செலவிற்காக வைத்திருந்தாக தெரிவித்தார். அதனால் அப்பணத்தை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திருமதி.அனிதா அவர்களுக்கு அருகில் நின்றுக்கொண்டிருந்த நபரைப்பற்றி விசாரிக்க, தனது பெயர் செல்வி.சுதா லஷ்மி, வயது-24, த/பெ, அசோக்குமார், எண்.36, அன்னை நகர், கடம்பத்தூர், திருவள்ளூர் என்றும், தான் ஆவண எழுத்தல் திரு.அருண் (வழக்கறிஞர்) அவர்களிடம் உதவியாளராக வேலை பார்ப்பதாகவும், சார்பதிவாளர் அலுவலகத்தில் வேலை அதிகமாக உள்ள நாட்களில் சார்பதிவாளர் உத்தரவின்படி பதிவு செய்யப்படும் ஆவணங்களில் பக்க எண்கள் எழுது பணிகளை செய்து கொடுப்பதாகவும் தெரிவித்தார். அவரை பெண் காவலர் மூலம் சோதனை செய்தபோது, அவரது கைபையில் ரூ.200/- இருந்தது. அப்பணத்தை பற்றி விசாரிக்க அவர் சொந்த செலவிற்காக வைத்திருந்தாக தெரிவித்தார்.

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

அதனால் அப்பணத்தை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. கணினி அறையில் நின்றுக்கொண்டிருந்த நபரை விசாரணை செய்தபோது, தனது பெயர் திரு.கஜேந்திரன்- வயது-42, த/பெ.கிருஷ்ணன், எண்.107, அருந்ததிபுரம், அயத்தூர் கிராமம், திருவள்ளூர் மாவட்டம் என்றும், தான் நந்தகோபால் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் வேலை செய்து வருவதாகவும், சார்பதிவாளர் உத்தரவின்படி டீ, காபி வாங்கி கொடுப்பது, ஆவணங்களை எடுத்து கொடுப்பது போன்ற வேலைகளை செய்து கொடுப்பதாக வும், தான் செய்யும் வேலைகளுக்கு ஆவண எழுத்தரே தனக்கு சம்பளம் கொடுப்பார் என்றும் தெரிவித்தார். மேலும் கணினி அறையில் இருந்த நபரை விசாரித்தபோது, திரு.முருகானந்தம், வயது-56, த/பெ.தெய்வசீகாமணி, வீரன் கோவில் தெரு, வீராபுரம், திருவள்ளூர் மாவட்டம் என்றும், திருவள்ளூர் சார்பதிவாளர் அலுவலகம் அருகே ஆவண எழுத்தர் அலுவலகம் வைத்துள்ளதாகவும், இன்று தான் தயாரித்துக்கொடுத்த ஆவணத்தினை பதிவு செய்வதற்காக, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி நபர்கள் அவர்களது விளக்கத்தினை கைப்பட எழுதி கொடுத்தார்கள். தனிநபர்கள் வேலை செய்வது குறித்து சார்பதிவாளர் திரு.ஸ்ரீதர் அவர்களை விசாரணை செய்தபோது, அலுவலகத்தில் பணியாளர்கள் குறைவாக இருப்பதாகவும், முகூர்த்தம் நாட்களில் வேலை அதிகமாக இருப்பதால், ஆவண எழுத்தர் அலுவலகத்தில் பணியாளர்களை உதவிக்காக அழைத்து வேலைகளை செய்துகொடுக்க சொன்னதாகவும் தெரிவித்தார். மேலும் கணினி அறையில் இருந்த கான்கிரிட் மற்றும் இரும்பு அலமாரியில் களப்பணி மேற்கொள்ளப்பட்ட பழைய அறிக்கைகளும், பதிவேடுகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பதிவு வைப்பறையை சோதனை செய்ய அதில் ஆவணங்கள் அடக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையை சோதனை செய்யப்பட்டது. மேலும், விசாரணைக்காக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் நிரந்த பணியாளர் வருகைப்பதிவேடு மற்றும் ஒப்பந்தபணியாளர் வருகைப்பதிவேடு ஜீன்/2026 நகல்கள், தனிநபர் பணப்பதிவேடு ஜீன்/2026 நகல் ஆகியவை கைப்பற்றப்பட்டது. 04.06.2026-ஆம்தேதி திருவள்ளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பான விவரங்கள் உள்ள Account-A-யை Printout எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள CCTV கேமரா குறித்து விசாரித்தபோது, IP Camera Operator-ஆக பணிபுரியும் திரு.அருண்கண்ணன் அவர்கள் இரண்டு கேமராக்கள் உள்ளதாகவும், வேலை செய்வதாகவும் தெரிவித்தார். சோதனையின்போது சார்பதிவாளர்கள் அலுவலகத்தில் உள்ளே இருந்த அட்டவணையில் வரிசையில் 7 முதல் 15 வரை குறிப்பிடப்பட்டுள்ள

(FIR content continues to the next page....)

(Content of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.06/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous....)

பொதுமக்கள் அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு உரிய விளக்கம் கொடுக்காததால் பணியாளர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கலாம் என்று கருதி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,89,800/- சோதனையின்போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வின்போது எடுக்கப்பட்ட பொருட்கள் அந்தந்த இடத்திலேயே வைக்கப்பட்டும், அலுவலகத்திற்கும், அலுவலகத்திலிருந்த கோப்புகள் மற்றும் பொருட்களுக்கும் எந்தவித சேதாரம் இன்றி சோதனை செய்யப்பட்டது. மேலும், சோதனையின்போது ஆவண பதிவுகளை தடையின்றி மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கையை ஒரு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையாக விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் தட்டச்சு செய்யப்பட்டது.இந்த திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையானது. இன்று 04.06.2026-ஆம் தேதி மாலை சுமார் 03.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு சுமார் 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. அதில் 1) திரு.R.ஜெயக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பப் பிரிவு, திருவள்ளூர். 2)திருமதி.S.மாலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பப் பிரிவு, திருவள்ளூர். 3)திரு,R.ஸ்ரீதர், வயது-47, த/பெ. இராமன், உதவியாளர் (பொறுப்பு) சார்பதிவாளர், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம். 4) திரு.D.சத்தியநாராயணன், மண்டல துணை வட்டாட்சியர், திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம், திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர் ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளனர்.

Honoured Madam,

I received the above Complaint and Proceedings and Registered a case in Thiruvallur V&AC Cr.No.6/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 05.06.2026 at about 14.00 hrs. The original FIR, Complaint along with the Joint Surprise Check Proceedings of Zonal Deputy Tahsildar, (Incharge) District Deputy Inspection Cell Officer, Thiruvallur Documents and seized un-explained amount of Rs.1,89,800/- at Thiruvallur Joint 1 Sub-Registrar office, Thiruvallur during the Joint Surprise Check are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Thiruvallur and other copies are forwarded to Superior Officers.

(S.MALA) 05/06/2026
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Thiruvallur.